உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 30.08.2026 • மலர் 04 • இதழ்: 242 • ஞாயிறு • Edition : Nagercoil • 30.08.2026 • Vol : 04 • Issue : 242 • Page : 4 • Rs. 5/-

# சென்னையில் பருவமழையை எதிர்கொள்ள 15 மண்டலங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் நியமனம்




சென்னை: சென்னை மாநகரில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள 15 மண்டலங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்து முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை பணிகளை கண்காணித்து உரிய மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக மண்டல அளவில் பொறுப்பு அமைச்சர்கள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்து முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி பொறுப்பு அமைச்சர்களாக, திருவொற்றியூர், மணலி மண்டலங்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், மாதவரம், தண்டையார்பேட்டை மண்டலங்களுக்கு வணிகவரித்துறை அமைச்சர் த. லோகேஷ் தமிழ்செல்வன், ராயபுரம், திரு. வி.க.நகர் மண்டலங்களுக்கு சுகாதாரத்துறை அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ், அம்பத்தூர், அண்ணாநகர், தேனாம்பேட்டை மண்டலங்களுக்கு கைத்தறித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோடம்பாக்கம், வளசரவாக்கம் மண்டலங்களுக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டி.கே.பிரபு, ஆலந்தூர், அடையாறு மண்டலங்களுக்கு போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் க.விக்னேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மண்டல கண்காணிப்பு அதிகாரிகளாக, திருவொற்றியூர் மண்டலத்துக்கு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநர் கே.பாலசுப்பிரமணியம், மணலி மண்டலத்துக்கு தமிழ்நாடு மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் பி.குமரவேல் பாண்டியன், மாதவரம் மண்டலத்துக்கு சர்க்கரை இயக்கக கூடுதல் இயக்குநர் எஸ்.அருண்ராஜ், தண்டையார்பேட்டை மண்டலத்துக்கு சர்க்கரை துறை ஆணையர் ஆர்.கண்ணன், ராயபுரம் மண்டலத்துக்கு சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஆஷா அஜித் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், திரு.வி.க.நகருக்கு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் பி.கணேசன், அம்பத்தூர் மண்டலத்துக்கு தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகத் துறை சிறப்பு செயலர் கே.விவேகானந்தன், அண்ணாநகர் மண்டலத்துக்கு சமூக பாதுகாப்புத் திட்டங்கள் துறை இயக்குநர் பி.காயத்ரி கிருஷ்ணன், தேனாம்பேட்டை மண்டலத்துக்கு நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநர் டி.கிறிஸ்துராஜ், கோடம்பாக்கம் மண்டலத்துக்கு, நில நிர்வாக ஆணையர் எஸ். கோபால சுந்தர ராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்னர்.

வளசரவாக்கம் மண்டலத்துக்கு தோட்டக்கலைத்துறை இயக்குநர் ஜெ.விஜயராணி, ஆலந்தூர் மண்டலத்துக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவன நிர்வாக இயக்குநர் வாகே சங்கேத்பல்வந்த், அடையாறு ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கே.செந்தில் ராஜ், பெருங்குடி மண்டலத்துக்கு கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிகுமார், சோழிங்கநல்லூர் மண்டலத்துக்கு அருங்காட்சியக இயக்குநர் டி.பாஸ்கர பாண்டியன் ஆகியோர் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## குமரி ஆட்சியரின் அதிரடி உத்தரவால் புத்தனாறு கால்வாய் புறம்போக்கு நில அளவுப்பணிகள் பாசனத்துறை நிர்வாகிகள் இணைந்து நடவடிக்கை



நாகர்கோவில், ஆக.30

நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாய் தலைவர். தாணுபிள்ளை நீண்ட நாட்களாகவே வெள்ளமடம் அருகேயுள்ள அய்யங்கார் மடையிலிருந்து அப்பகுதியிலுள்ள 7குளங்களுக்கும், சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பாசன பரப்பிற்கும், குளங்களுக்கும் தண்ணீர் பாயும் 'பாசன வாய்க்காலை' நிலஅளவை செய்து, எல்லைக்கற்கள் நட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றித்தர வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தார். இருப்பினும், அக்கோரிக்கை நிறைவேறாமலே இருந்து வந்தது.

இந்நிலையில், 27/8/2026ல் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் இப்பிரச்சனை பற்றி மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப் உடனடியாக நிலஅளவைத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளிடம் "ஏன் நீண்ட நாட்களாக நில அளவை செய்யவில்லை" என்று கேட்டதுடன், "நாளையதினமே நிலஅளவு பணிகளை முடித்து, எல்லைக்கற்கள் நட்டு, அது பற்றிய விபரத்தையும் படிவம்1 யும் வழங்க வேண்டும் என்று அதிரடி உத்தரவிட்டார்.

அதைத்தொடர்ந்து, 28/8/2026 குழுவினரால் நில அளவை பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. பாசனத்துறை சேர்மன் வின்ஸ் ஆன்றோ முன்னிலையில் நடைபெற்ற இப்பணிகளின் போது பாசனத்துறை மாவட்டக்குழு உறுப்பினர்கள் தாணுபிள்ளை, முருகேசபிள்ளை மற்றும் நீரினை பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்கள் உடன் இருந்தனர். மேலும், வருவாய் ஆய்வாளர் அமுதாதங்கமலர், கிராம நிர்வாக அலுவலர் கார்த்தீஸ்வரி உள்ளிட்டோர் முழுமையாக ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு விபரங்கள் மற்றும் மரங்கள் பற்றி படிவம்1 ல் அறிக்கை தயாரித்தனர்.

அதிரடி நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகளுக்கும், பாசனத் துறை நிர்வாகிகளுக்கும் விவசாயிகள் நன்றி தெரிவித்தனர். இதன்தொடர்ச்சியாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுத்து அப்பகுதிகளில் கண்டறியப்பட்ட ஆக்கிரமிப்புகளை விரைந்து அகற்றுமாறும் கோரிக்கை எடுத்துள்ளனர்.

## நாகர்கோவிலில் போதையில் மாடியிலிருந்து விழுந்த கண்டக்டர் உயிரிழப்பு

நாகர்கோவில், ஆக.30

நாகர்கோவில் கிருஷ்ணன் கோவில், தெலுங்கு செட்டி தெருவை சேர்ந்தவர் செந்தில் குமார் (49). நாகர்கோவில் மண்டல அரசு போக்குவரத்து கழகத்தில் டெப்போ 1ல் கண்டக்டராக பணியாற்றி வந்தார். இவருக்கு ரேகா என்ற மனைவியும் ஒரு மகளும் உள்ளனர். மகள் மார்த்தாண்டம் தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார்.

செந்தில்குமாருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்தது. அடிக்கடி குடித்துவிட்டு வந்து மனைவியிடம் தகராறு செய்வதாக கூறப்படுகிறது. இதனால் மனைவி ரேகா தனது மகளுடன் திருவட்டாறில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் சென்று அங்கு வசித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த 5ம் தேதி குடிபோதையில் தனது வீட்டில் மாடியில் இருந்து கீழே இறங்கும் போது செந்தில்குமார் நிலைத்தடுமாறி விழுந்து பலத்த காயம் அடைந்தார். வீட்டிலிருந்த அவரது தாய் மற்றும் அக்கம் பக்கத்தினர் செந்தில்குமாரை மீட்டு நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்று முன்தினம் 28ஆம் தேதி சிகிச்சை பலன் இன்றி செந்தில்குமார் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக அவரது மனைவி அளித்த தகவலின் பேரில் வடசேரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



## கோவை: வடமாநில தொழிலாளர்கள் குடியிருப்பில் தீ விபத்தால் வெடித்துச் சிதறிய 22 சிலிண்டர்கள்

கோவை: கோவையில் கட்டுமானப் பணியில் ஈடுபடும் வடமாநிலத் தொழிலாளர்கள் தங்கும் குடியிருப்பில் (ஆக.29) ஏற்பட்ட தீ விபத்தில் அடுத்தடுத்து 22 சிலிண்டர்கள் வெடித்து சிதறின.

கோவை நவஇந்தியா பகுதியில் பிஹார், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களை சேர்ந்த 400க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கி, கட்டுமானத் தொழிலில் பணியாற்றி வருகின்றனர். இங்கு இவர்கள் தங்க வசதியாக 75 தகர கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு கொட்டகையில் குறைந்தபட்சம் 5 பேர் வீதம் தங்கியிருந்து பணிக்கு சென்று வருகின்றனர்.

மேலும், இந்த தொழிலாளர்கள் சமையல் செய்து சாப்பிடுவதற்கு வசதியாக ஒரு கொட்டகைக்கு ஒரு கேஸ் சிலிண்டர் இருந்ததாக தெரிகிறது. இதில், சமையல் கேஸ் சிலிண்டர், வணிக கேஸ் சிலிண்டர், 5 கிலோ எடை கொண்ட கேஸ் சிலிண்டர்களும் அடங்கும்.

இந்நிலையில், இன்று வழக்கம் போல் தொழிலாளர்கள் வேலைக்கு சென்றிருந்தனர். ஒருசில தொழிலாளர்கள் மட்டும் அந்த கொட்டகையில் தங்கியிருந்ததாக தெரிகிறது. அப்போது நண்பகலில் சிலர் சமையல் செய்துள்ளனர். இதில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து அங்கிருந்தவர்கள் அந்த தீயை அணைக்க முயன்றனர். ஆனால், தீ பரவ தொடங்கியதால், அங்கிருந்த அனைவரும் அச்சமடைந்து வெளியே ஓடி வந்தனர்.

பின்னர், இதுகுறித்து கோவை தெற்கு தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் 3 தீயணைப்பு ஊர்திகளில் தீயணைப்புவீரர்கள் விரைந்து சென்றனர்.

மேலும், தீ கொளுந்து விட்டு எரிந்ததால் வெப்பம் தாங்காமல் அங்கிருந்த கேஸ் சிலிண்டர்கள் ஒவ்வொன்றாக வெடித்து சிதற தொடங்கியது.

## கிள்ளியூரில் சிறப்பு கால்நடை விழிப்புணர்வு முகாம் அமைச்சர், கலெக்டர் பங்கேற்பு



நாகர்கோவில், ஆக.30

கன்னியாகுமரி மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், கிள்ளியூர் சட்டமன்றத்திற்குட்பட்ட கண்ணன்விளை பகுதியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமையில் சுற்றுலாத்துறை அமைச்சர் செ. ராஜேஷ் குமார் நேற்று துவக்கி வைத்தார். பின்னர் அமைச்சர் பேசுகையில் :–

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் கால்நடை சுகாதார வசதிகளை வழங்கிடவும், விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 18 முகாம்கள் வீதம் மாவட்டத்தில் 162 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் முதல் நடைபெற உள்ளது.

அதனைத்தொடர்ந்து கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மிடலாம் ஊராட்சி, கண்ணவிளை கிராமத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாம்களில் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அதிகளவில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

தொடர்ந்து 9 பயனாளிகளுக்கு மாட்டுத்தீவனம் மற்றும் பரிசுபொருட்களை வழங்கினார். முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு. முனியசாமி, உதவி இயக்குநர் முகம்மது இஸ்மாயில், கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், கால்நடை மருத்துவர்கள், பயனாளிகள், பொதுமக்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## சம்பா, தாளடி பருவத்திற்கு தேவையான விதை நெல் ரகங்கள் இருப்பில் உள்ளது ;கலெக்டர் ரேவதி தகவல்

தஞ்சாவூர் ஆகஸ்ட் 30

சம்பா தாளடி பருவத்திற்கு தேவையான விதை நெல் ரகங்கள் இருப்பில் உள்ளது என கலெக்டர்ரேவதி தெரிவித்தார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயி கள் குறைதீர்க்கும் கூட்டம்நடந்ததுகூட்டத்திற்கு கலெக்டர் ரேவதி தலைமை தாங்கி பேசியதாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 945 ஏக்கர் பரப்பில் குறுவை சாகு படி செய்யப்பட்டது .இதில் 76 ஆயிரத்து 437 ஏக்கர் பரப்பில் அறுவடை பணியை நிறைவடைந்தது. சம்பா, தாளடி சாகுபடிக்கு தேவையான நீண்ட மற்றும் மத்திய கால நெல் ரகங்கள் வேளாண் விரிவாக்கம் மையங்கள் மற்றும் தனியார் விதை நிறுவனங்களில் 2,516 டன்னும், மத்திய கால நெல் ரகங்கள் வேளாண் விரிவாக்க மையங்க ளில் 370 டன்னும், தனியார் விதை நிறுவனங்களில் 800 டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது சம்பா தாளடி பருவத்திற்கு



தேவையான யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்க கடைகளில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது 2025 26 ஆம் ஆண்டிற்கு பயிர் கடன் வழங்க ரூபாய் 595 கோடி நிர்ணயம் செய்யப்பட்டதில் தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடந்த 21 ஆம் தேதி வரை ரூபாய் 8 கோடி 16 லட்சம் வழங்கப்பட்டுள்ளது .அனைத்து தொடக்க வேளாண் மை கூட்டுறவு கடன் சங்கங்களிலு ம் நடப்பு சாகுபடி பருவத்திற்கு4,118 டன் உரங்கள் இருப்பில் உள்ளது நெல் வரத்துக்கு ஏற்ப விவசாயிக ளின் நலன் கருதி நெல் கொள் முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது .நடப்பு பருவத்தில் கடந்த 23ஆம் தேதி வரை 482 நேரடி நெல் கொள்முதல் நிலையங் கள் திறக்கப்பட்டு, 3, இலட்சத்து 53 ஆயிரத்து813 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்படும் நெல்லுக்குஉண்டானதொகை விவசாயிகளுக் கு ரூபாய் 886 கோடி மின்னணு வங்கி பரிவர்த்தனை மூலம் வழங்க ப்பட்டுள்ளது. தட்கல் திட்டத்தில் பதிவு செய்த 369 விவசாயிகளில் 251 விவசாயிகளுக்கு மின் இணை ப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 118 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டு வருகிறது .இவ்வாறு கூறினார்.

# ஈரோட்டில் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்பு



ஈரோடு, ஆக.30: ஈரோட்டில் நடைபெற்ற கொங்கு வேளாளர் தொழில்நுட்பக் கல்விக் கழக அறக்கட்டளையின் நிறுவன தின விழாவில், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்று சிறப்பித்தார்.

கல்வி நிறுவனத்தின் நிறுவன தின விழாவை யொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத் துணைத் தலைவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். கல்வி, இளைஞர்களின் முன்னேற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சியில் கல்வி நிறுவன ங்களின் பங்கு குறித்து அவர் எடுத்துரைத்தார்.

கொங்கு மண்டலத்தில் கல்வி வளர்ச்சிக்கு பல் வேறுகல்விநிறுவனங்கள் ஆற்றிவரும் பங்களிப் பையும் அவர் பாராட்டினார். குடியரசுத் துணைத் தலைவரின் வருகையை யொட்டி நிகழ்ச்சி நடைபெற்ற பகுதியில் பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. விழாவில் கல்வியாளர்கள், நிர்வாகிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு நிகழ்ச்சியை நிறைவு செய்த குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், அடுத்த கட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக பெங்களூரு புறப்பட்டுச் சென்றார்.

# விளாத்திகுளம் அருகே நள்ளிரவில் அரசு அதிகாரிகளின் துணையுடன் ஆற்று மணல் கடத்தல்



விளாத்திகுளம் ஆகஸ்ட் 30. தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதாக அரசு அதிகாரிகள் மீது தமிழக வெற்றிக்கழக நிர்வாகி குற்றச்சாட்டு. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள மேட்டுப்பட்டி கிராமத்தில் வைப்பார் ஆற்றுப்படுகையின் அருகே சுமார் 8 ஏக்கர் பரப்பளவில்,50 அடி ஆழத்தில் தொடர்ந்து மூன்று நாட்களாக வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உதவியுடன் மணல் மாஃபியாக்கள் JCP மற்றும் 50க்கும் மேற்பட்ட டிராக்டர் வாகனம் மூலமாக இரவு முழுவதும் தொடர் மணல் திருட்டு ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து மணல் திருட்டு நடப்பதாக அப்பகுதி மக்கள் வருவாய்த்துறை மற்றும் காவல் துறைக்கு தகவல் தெரிவித்தாள்,அரசு அதிகாரிகள் புகார் கொடுத்த பொதுமக்களின் தொலைபேசி எண்ணை மணல் மாஃபியாக்களிடம் கொடுத்து மிரட்டி வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து தமிழக வெற்றிக்கழக நிர்வாகி எபநேசர் கூறுகையில், மேட்டுப்பட்டி கிராமம் அருகே உள்ள தனியார் வீட்டு மனை வழியாக பிரத்யோகமாக சுமார் 30 அடி அகலத்திற்கு பாதை அமைத்து, இரவு முழுவதும் சட்ட விரோதமாக அரசு அதிகாரிகளின் துணையுடன் ஆற்று மணல் அள்ளப்பட்டு வருகிறது, தற்போது வைப்பார் ஆற்றில் தண்ணீர் இல்லாமல் விளாத்திகுளம் பகுதி முழுவதும் குடிநீர் பிரச்சனை ஏற்பட்டு வரும் நிலையில், மணல் மாஃபியாக்கள் மணல் திருட்டில் ஈடுபடுவதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து அடுத்தாண்டும் குடிநீர் பிரச்சனை ஏற்படும் சூழ்நிலை ஏற்படுவதாகவும், விளாத்திகுளம் பகுதியில் உள்ள அரசு அதிகாரிகள் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் ஆட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதாகவும், தற்போது உள்ள அரசு அதிகாரிகள் திமுகவின் பிடியிலிருந்து செயல்பட்டு வருவதாக தமிழக வெற்றிக்கழக நிர்வாகி எபனேசர் குற்றம் சாட்டியுள்ளார். எனவே சமூக விரோத செயல்பாட்டில் ஈடுபட்டு வரும் மணல் மாஃபியாக்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் துணை போகின்ற வருவாய்துறை மற்றும் காவல் துறையினர் மீதும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் சார்பில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகி எபனேசர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# இரணியலில் கஞ்சா தடுப்பு சோதனை 1 கிலோ 550 கிராம் கஞ்சாவுடன் 3 பேர் கைது



நாகர்கோவில், ஆக.30 கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்கள் முற்றிலும் ஒழிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில் காவல்துறையினர் கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக இரணியல்காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் குளச்சல் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் காந்தி மேற்பார்வையில் இரணியல்காவல் ஆய்வாளர் அந்தோணியம்மாள் தலைமையில் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

மேற்கொண்ட சோதனையில் நெய்யூர் மேல்கரை பகுதியை சேர்ந்த பால்ராஜ் என்பவரின் மகன் மணிகண்டன் (23), தலக்குளம் புதுக்குளம் பகுதியை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவரது மகன் பிரசாத் (22) மற்றும் கோவில் விளாகம் பூத்துறை பகுதியை சேர்ந்த ஐசக் என்பவரின் மகன் டெக்ஸ்ட் ரோஸ் (28) ஆகியோரை கைது செய்த காவல்துறையினர் அவர்களிடம் இருந்து அரசால் தடை செய்யப்பட்ட 1 கிலோ 550 கிராம் கஞ்சா பறிமுதல் செய்து, இரணியல் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தனர்.

குமரி மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுபவர்கள் மீது இதுபோன்ற அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனகாவல்துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.



கோயம்புத்தூர் மாவட்டம்,கவுண்டர் மில்ஸ்,கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி கூட்ட அரங்கில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத்குமார் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் துறையின் சார்பில்,வீட்டு வசதி வாரிய பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

# அஞ்சல் துறை சார்பில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 4ம் தேதி நடக்கிறது

நாகர்கோவில், ஆக.30 கன்னியாகுமரிகோட்ட அஞ்சல் துறையின் கண்காணிப்பாளர் வை. தீர்த்தாரப்பன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய அஞ்சல் துறை சார்பாக கன்னியாகுமரி மாவட்ட அளவிலான மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் 04.09.2026 அன்று 11.00 மணியளவில் நாகர்கோவில் தலைமை அஞ்சலகத்தில் வைத்து நடைபெற உள்ளது. அஞ்சல்துறை சேவையில் ஏதேனும் குறைகள் இருப்பின் பொதுமக்கள் அதனை இக்கூட்டத்தில் நேரில் வந்து தெரிவிக்கலாம் (அல்லது) தங்கள் குறைகளை தபால் மூலமாக அனைத்து விவரங்கள் மற்றும் ஆவணங்களுடன் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். மேலும் dokanniyakumari.tn@indiapost.gov.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். தபால் உறையின் மீது முன்பக்க மேல்பகுதியில் 'தபால் சேவை குறை தீர்க்கும் முகாம் – செப்டம்பர் 2026' என்று தெளிவாக குறிப்பிட்டிருக்க வேண்டும். புகார் மனுக்கள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் 31.08.2026. என செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# குளச்சலில் மீன்பிடிக்க சென்று மாயமானவர் சடலமாக மீட்பு

குளச்சல், ஆக. 30 குளச்சல் துறைமுக தெருவை சேர்ந்தவர் சகாய ஆன்டனி ( 49). சொந்தமாக பைபர் வள்ளம் வைத்து மீன்பிடி தொழில் செய்து வந்தார். கடந்த 2 தினம் முன்பு வழக்கம்போல் கடலில் மீன்பிடிக்க சென்றார். நேற்று முன்தினம் காலை மீன்பிடித்து விட்டு கரை திரும்ப வேண்டியவர் வரவில்லை. இதனால் பதற்றம் அடைந்த மீனவர்கள் கடலுக்குள் சென்று அவரை தேடினர். ஆனால் சகாய ஆன்டனி குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இது குறித்து அவரது மனைவி சோஜி சுஜாதா குளச்சல் மரைன் போலீசில் புகார் அளித்தார். சப் இன்ஸ்பெக்டர் கதிரவன் தலைமையிலான போலீசார் மற்றும் மீனவர்கள் அவரை தேடி வந்தனர். ஆனால் கிடைக்கவில்லை.

இதற்கு இடையே நேற்று காலை மீனவர்கள் 2 வது நாளாக வள்ளங்களில் சென்று தேடினார்கள். குளச்சலுக்கும் கொட்டில் பாடுக்கும் இடையே கடலில் தேடும்போது சகாய ஆன்டனி உடல் கடலில் மிதந்தது. உடனே மீனவர்கள் உடலை மீட்டு குளச்சல் துறைமுகத்தில் கரை சேர்த்தனர்.

மரைன் போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கு இடையே மீன்பிடிக்க சென்ற வள்ளத்தை காணவில்லை. வள்ளம் கடலில் அடித்து செல்லப்பட்டதா? அல்லது கடலில் மூழ்கிதா ? என்பது தெரியவில்லை. மரைன் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழக அரசிடம்அளித்த புகார் மனு

# அரசையே ஏமாற்றி பதிலறிக்கை, அனுப்பிய தமிழ்நாடு மின்சார வாரியம்

சிவகங்கை ஆக,28, , காரைக்குடிக்கு அருகே உள்ள மேலமணக்குடி பகுதியில் தமிழ்நாடு மின் வாரிய பகிர்மானம் செயல்பட்டு வருகிறது. சிறுகப்பட்டி ஊராட்சி, பீர்க்கலைக்காடு என்ற பகுதிக்கு அருகே வயல் சேரி பட்டி சேர்ந்த பழனிச்சாமி என்பவர், தங்கள் பகுதியில்,HT LT மின் கம்பிகள் செல்வதாகவும், அதைத் தாங்கி நிற்கும் மின் கம்பங்கள் பழுதடைந்த நிலையில் இருந்து வருவதாகவும், இதனால் குலத்துவேல் பட்டி மற்றும் அப்பகுதியில் செல்லும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும், இதனை சரி செய்து தர வேண்டும் என தமிழக முதல்வர் தனி பிரிவிற்கு 18839249 என்ற எண்ணில் மனு செய்துள்ளார், அந்த மனு மீது மேலமனக்குடி மேலமனக்குடி பகுதியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் பகிர்மான உதவி மின் செயற்பொறியாளர், அந்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஒரு பதில் அறிக்கையினைஅனுப்பிஉள்ளார், அந்தப் பதில் அறிக்கையில் ட்ரான்ஸ்பார்மர் ஒன்றில் பியூஸ் போனதாகவும், அதனை சரி செய்து விட்டதாகவும், அது போன்று மின்கம்பிகளில் உரசி கொண்டிருந்த மரங்களை அகற்றியதாகவும், தற்போது சீரான மின்சார வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது, இதைப் பார்த்த மனுதாரர் அதிர்ச்சி அடைந்த நிலையில் நம்மிடம் சில கேள்விகளை எழுப்பினார், கொடுத்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காமல், வேறொரு அறிக்கையை அளித்து, பொதுமக்களாகிய எங்களை மட்டும் ஏமாற்றவில்லை, ஆளும் தமிழக அரசையே ஏமாற்றியுள்ளார்,

இது போன்ற அரசு அலுவலர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என கோரிக்கையும் முன் வைத்ததோடு, இந்த மண்ணில் எப்படி உயிர் வாழ முடியுமோ? என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார், தமிழக முதல்வர் தான் இது போன்ற அரசு அலுவலர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையும் விடுத்தார்.

தின தமிழ் நாளிதழில்
விளம்பரம் செய்து
பயன் பெறுங்கள் !

# தருமபுரியில் இயற்கை நதிநீர் இணைப்பு சங்கத்தின் அறிமுக விளக்கக் கூட்டம்



தருமபுரி ஆகஸ்ட் 30 தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு இயற்கை நதிநீர் இணைப்பு சங்கத்தின் அறிமுக விளக்கக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சங்கத்தின் மாநில தலைவர் நாகராஜன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் சங்கத்தின் நோக்கம், இயற்கை நதிநீர் இணைப்பின் அவசியம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. "தமிழகத்தில் தண்ணீர் பற்றாக்குறையை போக்க இயற்கையான முறையில் நதிகளை இணைப்பது அவசியம். விவசாயம் காக்கவும், குடிநீர் பிரச்சனையை தீர்க்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், நதிநீர் இணைப்பு திட்டம் மிக முக்கியம். இதற்காக மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். மேலும், "இயற்கை வளங்களை பாதுகாத்து, ஆறுகளில் தண்ணீர் வீணாக கடலில் கலப்பதை தடுத்து, அதனை விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும். இந்த சங்கத்தின் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்" எனவும் தெரிவித்தார். இந்தவிளக்கக்கூட்டத்தில் சங்கத்தின் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு: 5,000 போலீசார் பாதுகாப்பு



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு விழா வரும் செப்டம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ளது. விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை மின்சாரத்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் இன்று இரண்டாவது முறையாக ஆய்வு செய்தார்.

மாநகர காவல் ஆணையாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடன் கோவிலில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், விமானப் பகுதிகள், முக்கியஸ்தர்கள் மற்றும் பக்தர்களுக்கான ஏற்பாடுகளை பார்வையிட்டார். தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

குடமுழுக்கு விழாவிற்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், பாதுகாப்புப் பணியில் சுமார் ★★5,000 போலீசார்★★ ஈடுபடுத்தப்பட உள்ளதாக கூறினார். வீர வசந்த ராயர் மண்டபம் நாளை திறக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

குடமுழுக்கு அழைப்பிதழில் திமுகவைச் சேர்ந்த அறங்காவலர் குழு உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெறாதது குறித்து பேசிய அமைச்சர், கோவில் விவகாரத்தில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்றும், கோவிலுக்காக சிறப்பாக பணியாற்றக்கூடிய உண்மையான பக்தர்களே அறங்காவலர் குழுவில் இடம்பெறுவார்கள் என்றும் கூறினார்.

மேலும், அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமாரை விமர்சித்த அவர், அதிமுகவை அழிவுப் பாதைக்கு கொண்டு சென்றதில் அவருக்கு முக்கிய பங்கு இருப்பதாகவும், எடப்பாடி பழனிசாமிக்கு அடுத்ததாக பொதுச்செயலாளராக முயற்சி செய்து வருவதாகவும் குற்றம்சாட்டினார்.

குடமுழுக்கு விழாவை நேரலை செய்ய கட்டணம் வசூலிக்கப்படாது என்றும், அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு தனி இடம் ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# சேலம் எஸ்கேஎஸ் மகளிர் நல மையத்தில் உயர்தர மகப்பேறு மருத்துவ தளம் திறப்பு



சேலம், ஆக.29 சேலம் பிருந்தாவன் சாலையில் இயங்கி வரும் எஸ்கேஎஸ் மகளிர் நல மருத்துவ மையம் மற்றும் கருத்தரிப்பு மையத்தில் பிரத்யேக காஸ்மெட்டிக் கைனகாலஜி மற்றும் உயர்தர மகப்பேறு மருத்துவ தளம் திறப்பு விழா நடைபெற்றது.

எஸ்கேஎஸ் மருத்துவமனையின் சேர்மன் ஸ்ரீவசந்தா, நிர்வாக இயக்குனர் டாக்டர் சுரேஷ் விஸ்வநாதன், இயக்குனர் சோமாநந்தா சுரேஷ், தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் சிற்பி மணி, கருத்தரிப்பு மற்றும் மகளிர் நல மருத்துவர் கவிதா நாகராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். புதிய மருத்துவ தளத்தை நிர்வாக இயக்குனரின் குழந்தைகள் ஷாய்லின் மற்றும் ஷனாயா ஆகிய இருவரும் இணைந்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

இது குறித்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், எஸ்கேஎஸ் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் சுரேஷ் விஸ்வநாதன் கூறுகையில், சேலம் மக்களுக்கு சென்னை, கோவை போன்ற பெருநகரங்களில் கிடைக்கும் அதே உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையை சேலத்திலேயே வழங்குவதே எங்களின் நோக்கம் ஆகும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல, மன தன்னம்பிக்கையும் மிக முக்கியம் என்றார். புதிய தளத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால் பிரசவத்திற்கு பிறகு பெண்களின் உடலில் ஏற்படும் தொய்ந்த வயிறு, மார்பக தொய்வு, அந்தரங்க பகுதியில் தளர்வு, சிறுநீர் கசிவு, தழும்புகள் போன்ற பிரச்சனைகளுக்கு இதில், வயிறு தசைகளை இறுக்குதல், கொழுப்பைநீக்குதல் போன்ற பாதுகாப்பான அழகியல் சிகிச்சைகள் பெண் மருத்துவர்களை கொண்டு பாதுகாப்பான சிகிச்சைகள் அளிக்கப்படும் என தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், அறுவை சிகிச்சை பிரிவுகள், பல்வேறு மருத்துவ பிரிவுகள், தோல், பல் மருந்தகங்கள், இரத்த பரிசோதனை மையம், நுண்ணுயிரியல், உயிர் வேதியியல், நோயியல் உள்ளிட்ட ஆய்வகங்களை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .கோ.க.அருண்ராஜ்நேரில்பார்வையிட்டுஆய்வுமேற்கொண்டார்.உடன்,மாவட்டஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் .க.சத்யபாமா, இணை இயக்குநர் (நலப்பணிகள்).மோகனபானு, ஓசூர் தலைமை மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் .லட்சுமிஸ்ரீ உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# வேலூர் மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கியின் 109வது பொதுப்பேரவைக் கூட்டம்

வேலூர் மாவட்டம் வேலூர் அண்ணா சாலை டோல்கேட் பகுதியில் உள்ள ராணி மஹாலில் வேலூர் மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கியின் 109 வது பொதுப்பேரவை கூட்டம் தமிழ்தாய் வாழ்த்துடன் துவங்க பட்டது இக்கூட்டம் கூட்டுறவு வங்கியின் மேலான்மை இயக்குநர் தலைமையில் நடைபெற்றது மேலும் இக்கூட்டத்தில் மண்டல இணைப்பதிவாளர்கள் வேலூர் திருப்பத்தூர் இராணி ப்பேட்டை சரக துணைபதிவாளர்கள் வேலூர் திருப்பத்தூர் இராணிப்பேட்டை மற்றும் வேலூர் மொத்த விற்பனைபண்டகசாலையின் இப/மேலன்மை இயக்குநர் துனைபதிவாளர் செயலர் மற்றும் வேலூர் கூட்டுறவு சக்கரை ஆலையின் இனைபதிவாளர் மேலான்மை இயக்குநர் மற்றும் Nabard DD.M துனைப்பதிவாளர்கள் TA NFED அரக்கோணம் நகர கட்டுறவு வங்கியின் மேலான்மை இயக்குநர் துனை பதிவாளர் பால்வளம் உதவி இயக்குநர் கூட்டுறவு தனிக்கைத்துறை மற்றும் இதர கூட்டுறவு துறை அலுவலர்கள் அரசு துறை அலுவலர்கள் மற்றும் வங்கி பணியாளர்கள் கலந்துகொண்டு பேரவை கூட்டத்தைசிறப்பித்தனர். மேலும் இக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அனைத்து உயர் அலுவலகளுக்கும்புத்தகம்வழங்கி சிறப்பித்தனர்.



# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனர் சுந்தரேஷ் பாபு முன்னிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளின்முன்னேற்றம்குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் உதவிய ஆட்சியர் சாய் சைதன்யா ஜாதவ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜ கான், தனித் துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) அபிநயா, மாவட்ட வழங்கள் அலுவலர் கீதாராணி மற்றும் அந்தந்த துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்சியில் பால் வேன் டிரைவரை தாக்கி பணம் கொள்ளை 3 பேர் கைது; ஒருவர் தப்பி ஓட்டம்

திருச்சி ஆக.29 திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் பகுதியை சேர்ந்தவர் முரளி (வயது 38). இவர் பழைய குட்ஷெட்ரோடு பகுதியில் உள்ள ஒரு பால் விற்பனை நிலையத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறார்.

சம்பவத்தன்று இவர் தெப்பக்குளம் ஆர்ச் பகுதியில் வேனை ஓட்டி வந்து கொண்டிருந்தார் . அப்போதுஅங்கு 2 மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் ஏன் எனது மோட்டார் சைக்கிளை இடித்தாய் என்று முரளியிடம் பணம் கேட்டு தகராறில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு அவர் மறுக்கவேஅவரை தாக்கி விட்டு அவரிடம் இருந்த ஒரு செல்போன் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் ரூபாய் 65 ஆயிரம் ஆகியவை பறித்து அங்கிருந்து தப்பி சென்று விட்டனர். இது குறித்த புகாரின்பேரில்கோட்டை குற்ற பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தியதில் இந்த சம்பவத்தில் ஈடுபட்டது அரியமங்கலம் பகுதியை சேர்ந்த மாதேஸ்வரன் வயது 21, மேல அம்பிகாபுரம் பகுதியில் சேர்ந்த ஹரிஹரன் 20, சண்முக பிரியன் 24 ஆகிய மூன்று பேரை போலீசார் கைது செய்தனர். மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட கதிர்வேல் என்பவரை போலீசார் தேடி வருகின்றனர்.

தின தமிழ்
DHINA TAMIL
நிருபர்கள் தேவை
"வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக"
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தினதமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்.
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200, 70102 64701

# ஈரோட்டில் காங்கிரஸ் சார்பில் மறுசீரமைப்பு கூட்டம்.!




ஈரோடு ஆக 29 தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், மாவட்ட அளவிலான SSA2 இயக்க மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஆலோசனை கூட்டம் மாவட்ட தலவர் ராஜேஸ் ராஜப்பா தலைமையில் நடந்தது, . இதில் சிறப்பு விருந்தினராக ஈரோடு மாவட்ட பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டுமாவட்ட கமிட்டி அமைப்பது குறித்து ஆலோசனை வழங்கி, விண்ணப்பப் படிவங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர் விஜய பாஸ்கர் முன்னாள் கவுன்சிலர் அசோக் மற்றும் கோபி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் செயற்குழு கூட்டம்



தென்காசி,ஆகஸ்ட்30 தென்காசி தெற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் செயற்குழு கூட்டம் தென்காசி இரயில் நிலையம் எதிரே உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. செயற்குழு கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர்கள் சேது.அரிகரன், அய்யம் பெருமாள் பிள்ளை, திருமலை குமாரசாமி யாதவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயற்குழு கூட்டத்தில் மாநில சிறுபான்மை பிரிவு தலைவர் ஷேக்மைதீன், சமூக நீதிப் பேரவை மாநில மகளிர் அணி துணைத் தலைவி வழக்கறிஞர் சகிலா, மாநில வர்த்தக அணி தலைவர் தங்கராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று கட்சியின் வளர்ச்சி குறித்தும் சாதி, மத பாகுபாடின்றி உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்தும் உள்ளாட்சி தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்றும் வகையில் செயல்படுவது குறித்தும் சிறப்புரையாற்றி பேசினார்கள். இதனைத் தொடர்ந்து மாநில சிறுபான்மை பிரிவு தலைவர் ஷேக் மைதீன் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது கூறியதாவது பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாசின் ஆணைக் கிணங்க தென் மாவட்டங்களில் பாட்டாளி மக்கள் கட்சியின் கட்டமைப்பை பலப்படுத்துவதற்கான ஆயத்த கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தென்காசி தெற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தென்காசியில் இந்த செயற்குழு கூட்டம் நடைபெற்றது தென் மாவட்ட மக்களின் வாழ்வாதார பிரச்சனையாக இருப்பது தாமிரபரணி நதி இந்த தாமிரபரணி நதி குறித்து ஆண்ட கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், மண்ணின் மைந்தர்கள் என்று கூறிக் கொள்ளும் பலரும் தாமிரபரணி நதியை காக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் கடந்த 2017ம் ஆண்டு தாமிரபரணி நதியை காக்க வேண்டும் என்று நடைபயணம் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தர்மபுரி சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலும் சட்டமன்றத்தில் தாமிரபரணி நதியை மையப்படுத்தி அந்த நதியை சுத்தம் செய்து காக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் சௌமியா அன்புமணி மட்டுமே இது மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது என்று கூறினார்.

செயற்குழு கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட துணைத் தலைவர் மகாதேவன், மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் கெய்சர் அலி, மாவட்ட இளைஞரணி திருமலை குமார், ஒன்றிய செயலாளர்கள் சண்முகசுந்தரம், சங்கர நாராயணன், கருப்பசாமி, சிவன் ராஜ், மாரியப்பன், தங்கராஜ், ஆலங்குளம் தொகுதி மகளிர் அணி தலைவி சரஸ்வதி, இலஞ்சி பேரூர் கழக இளைஞர் அணி தலைவர் அன்புமணி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராம்குமார் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் புதிய பேருந்து நிலையத்தில், சின்னாதாமண்டரப்பள்ளி, பஞ்சப்பள்ளி, பி.சிங்கிரிப்பள்ளி, தளி ஆகிய பகுதிகளுக்கு வழித்தட நீட்டிப்பு / மாற்றத்திற்கான பேருந்துகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .கோ.க.அருண்ராஜ் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் .ச.கீர்த்தனா ஆகியோர் துவக்கி வைத்து, பேருந்தில் பயணம் செய்தனர். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் .ப.முகுந்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொதுமேலாளர் .ராஜராஜன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஆம்பூரில் தவெக சார்பில் 100 நாள் சாதனை விளக்கத் தெருமுனைப் பிரச்சாரம்



ஆம்பூர், ஆக:30, திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் 16வது வார்டு நியூ காங்கர்தக்கியா பகுதியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழக அரசின் முதல் 100 நாள் சாதனை விளக்கத் தெருமுனைப் பிரச்சாரம் மற்றும் சாதனை விளக்கக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் வேட்பாளர் இம்தியாஸ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு பயனளிக்கும் அரசின் திட்டங்கள் மற்றும் 100 நாள் சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றினார். குறிப்பாக சிங்கப்பெண் திட்டம், தாய்மாமன் சீர்திருத்தம் உள்ளிட்ட மக்களுக்கு நன்மை அளிக்கும் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் விளக்கிக் கூறப்பட்டது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நிகழ்ச்சியில் பங்கேற்ற 16வது வார்டு தவெக நிர்வாகிகள், முன்னாள் வேட்பாளர் இம்தியாஸ் சால்வை அணிவித்து கௌரவித்தனர்.

தொடர்ந்து, நிர்வாகி ஒருவரின் இல்லத்திற்கு சென்று குழந்தைக்கு பெயர் சூட்டும் நிகழ்ச்சியிலும் முன்னாள் வேட்பாளர் இம்தியாஸ் கலந்து கொண்டார்.

இதையடுத்து, முன்னாள் வேட்பாளர் இம்தியாஸ் தவெக நிர்வாகிகள், இளைஞர்கள் மற்றும் மகளிர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

மேலும், வீடு வீடாகச் சென்று தமிழக அரசின் முதல் 100 நாள் சாதனைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் இனிப்புகளை பொதுமக்கள், இளைஞர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 16வது வார்டு நிர்வாகிகள் தாரீம், ரிஸ்வான், லியாகத் அலி, கமால் பாஷா, இம்தியாஸ், ஜலீல், திலீப் குமார், நபீஸுரஹ்மான் ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் நகர நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஜோய்ஆலுக்காஸ் சேலம் ஷோரூமில் 'பிரிலியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ' 2026 ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 13 வரை



சேலம், ஆகஸ்ட் 29: உலகின் ஃபேவரிட் ஜுவல்லரான ஜோயாலுக்காஸ், ஆகஸ்ட் 28, 2026 முதல் தனது சேலம் கிளையில் 'பிரிளியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ' மூலம் சேலத்தையே அசத்தத் தயாராகி விட்டது. ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்தக் கண்காட்சி, வைர நகைகளின் நேர்த்தியான கலைத்திறன், நளினம் மற்றும் புதுமை ஆகியவற்றின் மறக்க முடியாத கொண்டாட்டமாக அமையவிருக்கிறது. மணமகளுக்கான பிரமாண்டமான நகைத் தொகுப்புகள் முதல், அன்றாடம் அணிய ஏற்ற நவீன மினுமினுப்புகள் டைமண்ட் காலத்தால் அழியாத பாரம்பரியத்தையும் நவீன அழகியலையும் இணைக்கும் நகைகளை இந்தக் கண்காட்சி வழங்குகிறது. ஒவ்வொரு வடிவமைப்பும் ஒருதலைசிறந்த படைப்பு; கண்காட்சி நடைபெறும் குறுகிய காலத்திற்கு மட்டுமே கிடைக்கும். இது குறித்து ஜோய்ஆலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான டாக்டர். ஜோய் ஆலுக்காஸ் கூறியதாவது: 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ' என்பது வைரங்களின் மீதுள்ள பெருமைக்கும், நகை வடிவமைப்பில் முழுமைத்தன்மையை நோக்கிய எங்கள் அர்ப்பணிப்பிற்கும் உள்ள தொடர்பை விவரிக்கும் ஓர் நிகழ்வாகும். சேலம் எங்கள் இதயத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. திருவிழா காலத்தை முன்னிட்டு இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது. அழகு, தனித்துவம் மற்றும் சிறந்த கைவினைத்திறனை பிரதிபலிக்கும் பிரத்யேக வடிவமைப்புகளை வாடிக்கையாளர்கள் கண்டறிய ஓர் அரிய வாய்ப்பை வழங்கும்." என்று தெரிவித்தார். இந்த சிறப்பு நிகழ்வை முன்னிட்டு, கண்காட்சி நடைபெறும் காலத்தில் ₹1 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பில் டைமண்ட் நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலவச தங்க நாணயம் வழங்கப்படும். இது அவர்களின் ஷாப்பிங் அனுபவத்திற்கு மேலும் சிறப்பைச் சேர்க்கும். 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ', செப்டம்பர் 13, 2026 வரை சேலம் ஷோரூமில் பிரத்தியேகமாக நடைபெறும். ஆடம்பரம், அன்பு மற்றும் காலத்தால் அழியாத அழகின் கதைகளை சொல்லும் அற்புதமான டைமண்ட் உலகத்தை நேரில் கண்டு ரசிக்க அனைத்து வாடிக்கையாளர்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். கவர்ச்சியின் கதையைச் சொல்லும் வைர நகைகளின் அற்புத உலகத்திற்கு அனைவரையும் வரவேற்கிறோம்.

# தூத்துக்குடி மாநகராட்சி கூட்டத்தில் பரபரப்பு: தவெக கவுன்சிலர்கள்–திமுகவினர் கடும் வாக்குவாதம்




தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றச் சாதாரணக் கூட்டம் நேற்று மாநகராட்சி கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமை தாங்கினார். மாநகராட்சி ஆணையர் பிரியங்கா மற்றும் துணைமேயர்ஜெனிட்டா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டம் தொடங்கியதும், சமீபத்தில் அதிமுக மற்றும் திமுகவிலிருந்து விலகித்தமிழக வெற்றி கழகத்தில் (தவெக) தங்களை இணைத்துக் கொண்ட கவுன்சிலர்கள் மந்திர மூர்த்தி (முன்னாள் அதிமுக) மற்றும் ராமர் (முன்னாள் திமுக) ஆகியோர் தங்களது இருக்கையில் அமராமல் எழுந்து நின்று கேள்விஎழுப்பத்தொடங்கினர். அவர்களை இருக்கையில் அமருமாறு மேயரும் ஆணையரும் கேட்டுக்கொண்டனர். இருப்பினும், அதை ஏற்க மறுத்த இருவரும் மேயரின் இருக்கை அருகில் வந்து காரசார வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, மேயர்ஜெகன் பெரியசாமி கூறுகையில் "திமுக முன்னாள் எம்.எல்.ஏ சண்முகய்யா தொகுதியின்மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களுக்கு, உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளின் பெயர்களை விட்டுவிட்டு அமைச்சர் மதன் ராஜா பெயரைக் கல்வெட்டில் பொறித்துத் திறந்து வைக்கிறார்கள். யார் பெத்த பிள்ளைக்கு யார் பெயர் வைக்கிறார்கள்? அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை" என்றார். தொடர்ந்து பேசியவர், "இங்குள்ள அமைச்சர் தரப்பில் இருந்து மாநகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் தேவையில்லாமல் பிரச்சினைகள் செய்யப்படுகின்றன என்பதை இந்த மன்றத்தில் வெளிப்படையாகவே தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் கூறினர். இதனைத் தொடர்ந்து, திமுக கவுன்சிலர்கள் மேயர் மற்றும் ஆணையர் முன்பாகவே தவெக கவுன்சிலர்களிடம் அருகில் வந்து எதிர்வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் கடும் அமளி ஏற்பட்டது. இதையடுத்து, தவெக உறுப்பினர்கள் இருவரும் மாமன்றக் கூட்டத்தைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து, மாமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டுப் பரிசீலனைக்குப் பின் நிறைவேற்றப்பட்டன. மாமன்ற உறுப்பினர்களின் இந்த மோதல் சம்பவத்தால் மாநகராட்சி அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில்

# பள்ளி மேலாண்மை குழு மறு கூட்டமைப்பிற்கான விழிப்புணர்வு கூட்டம்



திருப்பத்தூர்:ஆக:30, திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு மறு கூட்டமைப்பிற்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வித்துறையானது பள்ளி மேலாண்மைக் குழுவினை ஏற்படுத்தியது. இந்நிலையில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் மறு கூட்டமைப்பிற்கான கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் இக்கூட்டமானது நடைபெற்று. இக்கூட்டத்திற்கு பள்ளியின் தலைமையாசிரியர் விஜியகுமாரி தலைமை தாங்கினார். உடற்கல்வி ஆசிரியர் வீரமணி அனைவரையும் வரவேற்று பேசினார். தலைமையாசிரியர் பேசுகையில், பள்ளிக் கல்வித் துறை மூலம் பள்ளி மேலாண்மைக் குழுவினை கட்டமைப்பதற்கான அறிவிப்புகள் வெளிவந்துள்ளது. தலைவர், செயலாளர் கல்வியாளர், உறுப்பினர்கள் என பல்வேறு பொறுப்புகள் இருக்கும் நிலையில் முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் (தன்னார்வலர்கள்) ஆகியோர் சமூக சேவை மனப்பான்மையுடன் பொறுப்பிற்கு வரலாம். மேலும் கல்வி வளர்ச்சி, பள்ளி கட்டிட பராமரிப்பு, மாணவ மாணவிகள் ஒழுக்கம், ஆசிரியர்கள் பங்களிப்பு, கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு என பல துறைகளில் மாணவ மாணவிகளுக்கு ஊக்கம் அளித்து வெற்றி பெறச் செய்தல், சிறந்த பள்ளியாக வர அனைவரும் ஒத்துழைப்போம் என பேசினார். மேலும் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் சித்ரா, கல்வியாளர் ரஜினி ஆகியோர் பள்ளி மேலாண்மைக் குழு குறித்த முன் அனுபவங்கள், செயல்பாடுகளை கூறி வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து பெற்றோர்களுக்கு தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை வெளியிட்ட விழிப்புணர்வு காட்சிகள், படங்களை ஒளித் திரை மூலமாக வெளியிட்டனர். கூட்டத்தின் முடிவில் கணித ஆசிரியர் விஜியகுமார் நன்றியுரை வழங்கினார்.

# கன்னியாகுமரியில் திருவோணம் விடுமுறையொட்டி குவிந்த சுற்றுலா பயணிகள்




கன்னியாகுமரி, ஆக.30

கன்னியாகுமரி கடற்கரையில் ஓணம் பண்டிகையை தொடர் விடுமுறையை ஒட்டி சுற்றுலா பயணிகள் ஏராளம் பேர் குவிந்தனர்.

கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். இருப்பினும் விடுமுறை நாட்களிலும் பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள். இந்நிலையில் திருவோணம் பண்டிகை விடுமுறையையொட்டி கேரளாவில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வந்திருந்தனர். மேலும் ஏராளமான வட மாநில தொழிலாளர்களும் கன்னியாகுமரியில் குவிந்தனர். .இதனால் கடற்கரைச் சாலைகளில் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பினால் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. சுற்றுலா பயணிகள் கடற்கரை மற்றும் கடை வீதிகளிலும் வலம் வந்தபடி இருந்தனர்.

காலையில் சூரிய உதயம் பார்ப்பதற்காக ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அதனைத் தொடர்ந்து முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். பின்னர் கன்னியாகுமரி கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட நீண்ட வரிசையில் காத்திருந்த சுற்றுலா பயணிகள் பொறுமையுடன்படகில்சென்று விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையை கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று பார்த்து ரசித்தனர்.

கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலாத் தலங்களான விவேகானந்தா கேந்திர வளாகத்தில் அமைந்துள்ள பாரத மாதா கோவில், ராமாயண தரிசன சித்திர கண்காட்சி கூடம், காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், அரசு அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், மீன் காட்சி சாலை, அரசு பழத்தோட்டம், சுற்றுச்சூழல் பூங்கா உள்பட அனைத்து சுற்றுலா தளங்களிலும் நேற்று காலையிலிருந்துசுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது.இதனால் சுற்றுலா தலங்கள் களை கட்டியது.வியாபாரிகளும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

கடற்கரையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்பட்டதால் போலீசாரும்,கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

# நாகர்கோவிலில் மாணவர்களுக்கான அறிவுசார் மையம்; அமைச்சர் திறந்து வைத்தார்



நாகர்கோவில், ஆக.30


நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட, கோணம் பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் போட்டித்தேர்வுகளை எதிர்கொள்வதற்கான புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, மாநகராட்சி ஆணையாளர் ஐஸ்வர்யா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் புத்தகங்களை வழங்கி பேசியதாவது:

குமரி மாவட்டம், படிப்பறிவு மிகுந்த மாவட்டமாக உள்ளதால், மக்களின் அறிவுதிறனை கூடுதலாக வளர்த்துக்கொள்ள நாகர்கோவில் மாநகராட்சியில் கோணம் பகுதியில் அறிவுசார் மையம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த திறன் மேம்பாட்டு மையம் மற்றும் நாகர்கோவில்மாநகராட்சிஇணைந்து பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் மேற்படி கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. எனவே அங்கு பயிலும் மாணவர்களின் படிப்பு பாதிக்காத வண்ணம் 6வது மாநில நிதி குழுநிதி ட்டத்தின் கீழ் ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது. இம்மையத்தில் சுமார் 2750 எண்ணம் புத்தகங்கள் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்துஇம்மையத்திற்கு தினம்தோறும் 150 முதல் 180 வரையிலான மாணவ மாணவியர்கள் வந்து படித்து பயன்பெற்று செல்கிறார்கள். மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இம்மையத்தில் அமர்ந்து படித்து செல்கின்றனர்.

நான் கடந்த 04.08.2026 அன்று இந்த அறிவுசார் மையத்திற்கு ஆய்வு மேற்கொண்டபோது, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணையம், ஒன்றிய அரசு பணியாளர் தேர்வு ஆணையம், ரயில்வே துறை மற்றும் நீட் போன்ற தேர்வுகளுக்கான கூடுதல் புத்தகங்களை வாங்கிடவும் மின்தடை காலங்களில் மின்வசதி செய்திடவும் மாணவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்தனர்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மண்டலத்தலைவர் செல்வகுமார், மாணவர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையில் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே பழனிச்சாமிக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்



ஓசூரில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அதிமுக பொதுச் செயலாளரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையான சப்பாணி பட்டியில் அதிமுக துணை பொதுச்செயலாளர் கேபி முனுசாமி தலைமையில் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையைவந்தடைந்த எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை மாவட்ட செயலாளர் அசோக்குமார் பர்கூர் சட்டமன்றத் உறுப்பினர் கோவிந்தராஜன் காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் இரவிச்சந்திரன்கட்சி நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பூ கொத்து கொடுத்து உற்சாகமாக வரவேற்றனர். அப்போது ஏராளமான தொண்டர்கள் திரண்டு நின்று முழக்கங்களை எழுப்பி தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து, ஓசூரில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அவர் புறப்பட்டுச் சென்றார்.

இந்த வரவேற்பு நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பேரூராட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான அதிமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர். எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் வருகையையொட்டி கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையானசப்பாணிப்பட்டி பகுதியில் உற்சாகத்துடன் வரவேற்றனர்



# கிள்ளியூரில் புதிய தடத்தில் பஸ் இயக்கும் போது மக்கள் பஸ்சை சிறைபிடிப்பு

## கலெக்டர், அமைச்சர் பேச்சுவார்த்தை

மார்த்தாண்டம், ஆக.30

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி கிள்ளியூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கம்பிளார் சுற்றுவட்டார உள்ளூர் கிராமங்களுக்கு அரசு பேருந்துகள் இயக்கப்படாமல் இருந்து வந்ததால் ஏராளமான பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் அலுவலகங்களுக்கு செல்லும் பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். இதனால் உள்ளூர் கிராமங்களுக்கு அரசு பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை ஏற்று தமிழக போக்குவரத்துறை அமைச்சரின் உத்தரவின் பேரில் புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார், மாவட்ட ஆட்சியர் பிரதாப் மற்றும் தவெக மாவட்ட செயலாளர் சபின்ஆகியோர்பேருந்து இயக்கத்தை துவக்கி வைக்க வருகை தந்தனர். இதற்கிடையே ஏற்கனவே இயக்கப்பட்டு வந்த வழித்தடத்தை மாற்றி பேருந்துகள் இயக்கப்படுவதாக கூறி ஊர் மக்கள் அரசு பேருந்தை சிறைபிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தமிழக சுற்றுலாதுறை அமைச்சர் ராஜேஷ் குமார் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஊர் மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி பழைய வழித்தடத்திலும் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தனர். இதனையடுத்து போராட்டகாரர்கள் போராட்டத்தை கைவிட்டனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மேட்டூர் அணை திறப்பை தள்ளி வைக்க வேண்டும்

## விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை

தஞ்சாவூர்ஆகஸ்ட் 30

நீர்இருப்பு, வரத்து குறைவாக உள்ளதால் மேட்டூர் அணை திறப் பை தள்ளி வைக்க வேண்டும் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டம் வலியுறுத்தல்

மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்ற கூட்டத் தில் விவசாயிகள் சங்கங்களின் கூட்டியக்கத் துணைத் தலைவர் கக்கரை சுகுமாரன் தலைமையில் விவசாயிகள் ,அலுவலர்கள் இருக்கை முன் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்

அப்போது மேட்டூர் அணையின் நீர் இருப்பும் ,வரத்தும் குறைவாக உள்ளது. அணையைத்திறந்து விட் டு பெயரளவுக்கு குறைவான தண்ணீர் விடுவதால், சாகுபடிக்கு பயன்தராது. எனவே நீர் மட்டம் 100 அடியை எட்டிய பிறகு தண்ணீர் திறக்க வேண்டும். அதுவரை திறக்க கூடாது. கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு ரூபாய்50 லஞ்சம் வாங்குவது இன்னும் தொடர்கிறது. மண் அள்ளவும் லஞ்சம் வாங்க படுகிறது பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி, பின்னர் வெளிநடப்பு செய்தனர்

பட்டுக்கோட்டை ராமலிங்கம்த

ண்ணீர் பற்றாக்குறை உள்ள நிலையில் சி. ஆர்1009 விதை நெல் ரகம் சிறந்தது .ஆனால் அந்த ரகம் இல்லை என கூறுகின்றனர்.

கலெக்டர் :விதை நெல் ரகங்கள் தேவையான அளவுக்கு விநியோக ம் செய்யப்படும். இங்கு இல்லாவிட்டாலும் மற்ற மாவட்டங்களில் இருந்து பெற்று வழங்கப்படும் மேலும் தற்போதைய சூழ்நிலையில், நம் மாவட்டத்திற்கு ஏற்றவாறு என்னென்ன விதை ரகங்களைப் பயன்படுத்தலாம் என்பது குறித்து அடுத்த வாரம் முதல் வட்டார அளவில் பயிற்சி முகாம் நடத்தப்படும். வேளாண் இணை இயக்குனர் பொறுப்பு சாருமதி

தற்போது மத்திய கால விதை நெல் ரகங்கள் 350 டன் உள்ளது. தவிர, 83 டன் தயாராகி வருகிறது பிபி திருச்சி 3 ,ஏ டீ டி 58 போன்ற ரகங்கள் 100 டன் இருக்கிறது. எந்த பகுதிக்கு என்னென்ன ரகம் எவ்வளவு தேவை எனக் கூறினால் ஏற்பாடு செய்யப்படும்.

தோழகிரிப் பட்டி கோவிந்தராஜ் : குறுவை சாகுபடி பொய்த்து விட்டதால், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவித்துநிவாரணம்வழங்க வேண்டும்

ராய முட்டாண்பட்டி ஜீவகுமார்:தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உய்யர்கொண்டான்நீட்டிப்பு வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் நம்பி ஏராளமான ஏரிகளும் ,அதை சார்ந்து சாகுபடி உள்ளன. எனவே மேட்டூர் அணையை திறக்கும் போது இரு வாய்க் கால்களுக்கும் தண்ணீர் திறக்க வேண்டும்அ

ம்மையகரம் ரவிச்சந்தர்குறுவைக்கு காவிரி நீர் வராததால் வருவாய் கிராம அளவில் 75 சதவீத சாகுபடி செய்யாமல் காப்பீட்டுக் கான பிரீமியம் செலுத்திய விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும்.புலவன்காடு மாரியப்பன் தண்ணீர் பற்றாக்குறை உள்ள நிலையில் நேரடி விதைப்பு செய்வ தற்கு உழவு மானியம் கொடுத்தால், விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். மேலும் சம்பா தொகுப்பு திட்டத்தையும்அறிவிக்க வேண்டும்

# ஈரோட்டில் 'இளம் இந்தியர்கள் நாடாளுமன்றம் 2026' போட்டி: அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் பங்கேற்பு




ஈரோடு, ஆக. 30:

இந்திய தொழில் கூட்டமைப்பின்(CII)அங்கமான 'யங் இந்தியன்ஸ்' (Yi) ஈரோடு கிளை சார்பில், 'தளிர்கள்' அமைப்பின் இணைப்பில் 'இளம் இந்தியர்கள் நாடாளுமன்றம் 2026' தெற்கு மண்டலப் போட்டி ஈரோட்டில் நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆகஸ்ட் 28 மற்றும் 29 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற இப்போட்டியில், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பு, ஜனநாயக நெறிமுறைகள், நாடாளுமன்ற விவாத நடைமுறைகள் மற்றும் பொதுப் பேச்சாற்றலை வளர்க்கும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

JKKN கல்வி நிறுவனங்களின் அனுசரணையில் நடைபெற்ற போட்டியில், மாணவர்கள் பல்வேறு பொதுநலத் தலைப்புகளில் தங்களது கருத்துகளையும் விவாதங்களையும்முன்வைத்து திறமையை வெளிப்படுத்தினர்.

அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் சிறப்புரை

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார். ஜனநாயகத்தின் செயல்பாடுகள், இளைஞர்களின் பங்களிப்பு மற்றும் தலைமைத்துவத் திறன்களின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடம் அவர் எடுத்துரைத்தார்.

மாணவர்களின்அறிவுத்திறன், பேச்சாற்றல் மற்றும் விவாதத் திறனை வெளிக்கொணரும் வகையில் நடைபெற்ற இப்போட்டி, இளம் தலைமுறையினருக்கு நாடாளுமன்ற ஜனநாயக நடைமுறைகளை நேரடியாக அறிந்துகொள்ளும் வாய்ப்பாக அமைந்தது.

# மண்டைக்காட்டில் எ.வி.எம்.கால்வாய் தூர்வாரும் பணியினை அமைச்சர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஆக.30

கன்னியாகுமரி மாவட்ட நீர்வளத்துறையின் சார்பில் மண்டைக்காடு, புதூர் கடலோர பகுதியாவுள்ள எ.வி.எம்.கால்வாய் தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமையில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் தாரகை கத்பர்ட் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் நேற்று துவக்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டம், கேரள மாநில எல்லை பகுதி வழியாக தமிழ்நாட்டின் எல்லை பகுதியான நீரோடி, வல்லவிளை, தூத்தூர், பூத்துறை, இரையுமன்துறை, தேங்காய்பட்டணம், குளச்சல், மண்டைக்காடு உள்ளிட்ட கடற்கரை வழியாக செல்லும் ஏ.வி.எம் கால்வாய் பல ஆண்டுகளாக தூர்வாரபடாமல் இருந்த நிலையில் கடலோர கிராம மக்கள், விவசாய பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கால்வாயினை தூய்மைப்படுத்தி பொது மக்கள் மற்றும் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென கோரிக்கை வைத்தார்கள்.

அதனடிப்படையில் எ.வி.எம்.கால்வாய் தூர்வாரும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் கோதையாறு வடிநில கோட்டம், நாகர்கோவில் கோதையாறு வடிநில உப கோட்டம், தக்கலை நீர்பாசன (சிறப்பு) பிரிவு, தக்கலை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குளச்சல் முதல் மண்டைக்காடு புதூர் வரையிலான எவிஎம் கால்வாய் 4300 மீட்டர் நீளம் கொண்டது. வட்டத்திற்குட்பட்ட கல்குளம் மண்டைக்காடு, லெட்சுமிபுரம், குளச்சல் ஏ மற்றும் குளச்சல் பி ஆகிய நான்கு வருவாய் கிராமங்களை உள்ளடக்கி இக்கால்வாய் செல்கிறது. இக்கால்வாய்க்கு தனியாக ஆயக்கட்டு நிலங்கள் ஏதும் இல்லாத நீரோடையாகும். தற்போது கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டு கழிவுகள் தேங்கியுள்ள காரணத்தால் கால்வாயில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

நடைபெற்ற நிகழ்வில் உதவி செயற்பொறியாளர் கதிரவன், பொறியாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் வின்ஸ் ஆன்றோ, பொதுமக்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# அதங்கோடு அரசு உயர்நிலைப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் ஒழுங்காக நடைபெறுவது இல்லை

## பெற்றோர் புகார்

களியக்காவிளை, ஆக.30

களியக்காவிளை அருகே அதங்கோட்டில் அரசு உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த வருடம் இதுவரை பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெறவில்லை என்றும் பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர். பெற்றோர்கள் தலைமை ஆசிரியர் மற்றும் 30 வருடமாக பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராக இருப்பவரிடம் முறையிட்டும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்தப்படவில்லை. இதன் காரணமாக பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர் ஆசிரியர்களுக்கு இடையிலான தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

இந்த காரணத்தால் பள்ளியின் வளர்ச்சி மற்றும் மாணவர்களின் ஒழுக்கம் சீர்கெட்டு போகும் அபாயத்தில் உள்ளது. எனவே கல்வித்துறை உடனடியாக இந்த விஷயத்தை சீரியஸாக எடுத்துக்கொண்டு உடனடியாக பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர் ஒருவரை பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராக நியமித்து மாதந்தோறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்தி பள்ளியில் வளர்ச்சியை பாதுகாக்க சமூக ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் ஊர் பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.



திருவள்ளூர்மாவட்டத்தின், மாமண்டல அலுவலர் கூட்டுறவுச்சங்கங்களின்கூடுதல்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) திரு.ச.சுப்பிரமணியன் அவர்கள் மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் பயிர்க்கடன்கள், மகளிர் சுய உதவிக்குழு கடன்கள், டாம்கோ, டாப்செட்கோ மற்றும் அனைத்துக் கடன்களின் முன்னேற்றம், இவாடகை, இசேவை மையங்களின் செயல்பாடுகள் மற்றும் துறை சார்ந்த பணிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து அனைத்து சரக துணைப்பதிவாளர்களுக்கும், திருவள்ளூர் சரகத்திற்குட்பட்ட பூந்தமல்லி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் திறனாய்வு கூட்டம் நடத்தினார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.